# அண்ணாவியார் ஆசீர்வாதம் தேவசகாயம்பிள்ளை

**ஆழ்த்து முத்துக்கள் 161**

**- ஆர்.எல். சேவியர் -**

ஓங்கிவளர்ந்த தென்னைகள் தென்றலை வாங்கிச் சலசலக்க ஓடிவரும் கடலலைகள் கோடிமுறை முத்தமிட்டுத் தழுவும் திருவூர் பாஷையூர். தலை நிமிர்ந்த செருக்கோடும் தமிழ் வளர்த்த நினைவோடும் புகழின் உச்சியிலே ஏறிநின்ற மண்.

யாழ்ப்பாண மாநகர சபையின் நிர்வாகப் பகுதியில் அமைந்துள்ள பாஷையூர், கடல் வளமும் கலைவளமும் செல்வமும் கொழித்து வளர்ந்த பூமி. இப்பூமியில் இயலையும் இசையையும் பின்னிக் கிடக்க வைத்து கன்னித் தமிழால் விழுமியக் கருத்துகளையும் விரிவான சிந்தனைகளையும் ஆற்றுகை மூலம் புலப்படுத்து கின்ற அழகிய கலையே நாட்டுக்கூத்து. இருள் கௌவிப்பிடித்த சமுதாய வானத்திலே அருளொளி வீசவந்த அமுத நிலவே அது. இதுவே ஈழத்தமிழர்களின் தேசியக் கலைவடிவம்

போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த வாஸ் கொடகாமா 1498ம் ஆண்டு இந்தியாவிலுள்ள கள்ளிக்கோட்டையில் வந்திறங்கியதைத் தொடர்ந்து வாசனைத் திரவிய வேட்டையும் கத்தோலிக்க மதப்பரப்புதலும் இடம் பெற்றது. மதப்பிரசாரத்திற்கு ஏற்ற ஊடகமாக கூத்துக்கள் தமிழ் நாட்டில் முளைவிட்டன.

1621ம் ஆண்டு யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரது ஆட்சியின் கீழ் வந்தது. இப்படியே தமிழ் நாட்டிலிருந்து கூத்துக்கள் இலங்கையின் வடபகுதிக்கு அறிமுகமாகின. 1687ம் ஆண்டு இலங்கைக்கு வந்த வண. யோசேப் வாஸ் அடிகளால் அடியிடப்பட்ட தமிழ்க் கூத்துக்கள் 1705ம் ஆண்டு இலங்கைக்கு வந்த வண. யாக்கோமே கொன்சால்வேலஸ் அடிகளால் வீறுகொண்டதெனச் சொல்லப்படுகிறது. காலம் சுழன்று வந்தபோது ஈழத் தமிழ் மக்களிடையே பலவித கூத்துக்கள் குறிப்பாக வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்து என்பன செல்வாக்குச் செலுத்தி வளர்ச்சி கண்டிருந்தன.

அந்த வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிலும் அண்ணாவிமார்கள் நாட்டுக்கூத்தை வளர்க்க முற்பட்டார்கள் யாழ்நகரின் முத்தென விளங்கும் பாஷையூர்ப் பதிதனிலே அண்ணாவியார் ஆசீர்வாதம் செகராசசிங்கம் ஒக்ரோபர் 10, 1915ல் பிறந்தார். கொழும்புத்துறை புனித சூசையப்பர் பாடசாலையில் கல்வி பயின்றார். இவர் சிறுவயதிலிருந்தே இலக்கியத் துறையிலும் நாட்டுக் கூத்துத் துறையிலும் ஈடுபடுவதற்கு உந்து சக்தியாயிருந்தவர் இவரது பேரனாகிய நீ. சம்பூரணம். என்றும் இவரது கலைவாழ்வின் உயர்ச்சிக்கு உறுதுணையும் ஊக்குவிப்புமாயிருந்தவர் இவரது வாழ்க்கைத் துணைவியார் என்றும் சொல்லப்பட்டது.



இவரால் படைக்கப்பட்ட சிறந்த கூத்துக்கள் சில

- இம்மனுவேல் - 1955ம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது.
- மனோகரா - 1986ம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது.
- பூதத்தம்பி - 1970ம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது.
- குருமணி யோசேப் வாஸ் - 1988ம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது
- சம்பூர்ண அரிச்சந்திரா - 1993ம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது.

இவரது இம்மனுவேல் நாட்டுக்கூத்திற்கு 1997ல் அண்ணாவியார் கணக்கர் ஞாபகார்த்தப் பரிசும் இலங்கை இலக்கியப் பேரவை சான்றிதழும் கிடைத்தது.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தால் ‘கலைஞர்’ கௌரவச் சான்றிதழ் மே 09, 1993ல் இவருக்கு வழங்கப்பட்டது.

பாஷையூர் வளர்பிறை நாடக மன்றத்தால் ‘முத்தாரக் கவிஞர்’ என்ற விருதும் யாழ் நாட்டுக்கூத்து இலக்கியக் கழகத்தாலும் ‘முத்தாரக் கவிஞர்’ என்ற விருதும் இவருக்கு வழங்கப்பட்டன.

மேலும் இவரது சாகித்தியப் பரிசு பெற்ற ‘இம்மனுவேல்’ நாட்டுக்கூத்து நூலுருவில் வெளிவந்தபோது முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

மற்றும் இரவது குருமணி ‘யோசேப் வாஸ்’ நாட்டுக் கூத்து நூலுருவில் ஒகஸ்ட் 22, 2002ல் வெளிவந்தபோது யாழ். திருமறைக் கலாமன்றத்தின் முத்தமிழ் விழாவில் மன்ற இயக்குனர் நீ. மரியசேவியர் அடிகளால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இவரது படைப்புகள் யாழ் மண்ணின் பல பாகங்களிலும் இவர் பெற்ற பிள்ளைகளாலேயே நடிக்கப்பெற்று புகழ் பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்புகழ் பெற்ற கலைஞர் இறுதியாக தனது 89 வயதில் காலமானார் எனவும் இறுதிவரை கலைப்பற்றுடையவராகவே வாழ்ந்தார் எனவும் எமது தாயகத்திலிருந்து புலம் பெயர்ந்து கனடாவில் வாழும் இவரது பேரப்பிள்ளைகள் மூலம் முக்கிய தகவல்களைப் பெற முடிந்தது. இவரது பேரப் பிள்ளைகளில் ஒருவர் கனடிய மண்ணில் பிரபல சட்டத்தரணியாகவும் பணியாற்றுகிறார் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இவரைப் போன்ற எத்தனையோ அண்ணாவிமார், கலைஞர்கள் எமது தாயக மண்ணில் தோன்றி மறைந்திருக்கிறார்கள் என்பதையிட்டும் நாம் ஒவ்வொருவரும் பெருமைப்படவேண்டும்.

எனவே இக்கலைஞர்கள் காட்டியபாதையில் எமது தற்கால இளைஞர்களும் எமது பாரம்பரிய கலைகளை அழியவிடாது பேணிப்பாதுகாப்பதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதை எவரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.



xavier.raphael@thaiveedu.com

*தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com***
***Fax: 416-849-0594 Tel: 416-646-3422***


# உங்களுக்குத் தெரிந்த கலைஞர்கள் பற்றி நீங்களும் எழுத வேண்டுமா?

கலைஞர்கள் பற்றிய விபரங்கள், அவர்களுடைய புகைப்படங்களுடன்
உங்களுடைய பெயர், தொலைபேசி எண், புகைப்படம்
மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டுக்கு அனுப்பிவையுங்கள்.

**Thaiveedu**
**Woodside Square, P.O.Box #63581**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**